முருகப்பெருமான் துணை

முருகப்பெருமான் தலைமையில் உலகம் அனைத்தும் ஞானியர்களின் ஆட்சிக்கு உட்படும்.

**இந்த நூல் முருகப்பெருமானே அரங்கமகானுக்காக மனமுவந்து கைப்பட எழுதிய அருள்வாக்கு**

இதை பக்தியுடன் படிப்பவர்களுக்கு ஞானம் சித்திக்கும்.

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம்: 947

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

03.05.2022, செவ்வாய்கிழமை

1. ஆறுமுக ஞானியே அரங்கா வாழ்க
ஆற்றல்மிக்க தவசியே தேசிகா வாழ்க
மாறுதலை இந்த கலியில் செய்வதென
மாதவத்தை என்பால் வரமாக பெற்று வந்த
2. வந்தநல் அரங்கனே தேசிகனே
வாழ்தியே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
சிந்தைபட ஞான அறிவுரை ஆசி
செப்பிடுவேன் சுபகிருது தகர்திங்கள் தன்னில்
(சுபகிருது வருடம் சித்திரை மாதம் 20ம் நாள், 03.05.2022 செவ்வாய்கிழமை)
3. தன்னிலே அரங்கனின் தர்மமே
தரணியை காத்து மீட்டருளும்
அண்ணலின் சன்மார்க்க நெறிமுறையே
அடியவர்களை ஞானவழிகொண்டு கடைத்தேற்றும்
4. தேற்றத்தை தரவல்ல மாதவசி
தெய்வீக வரம் தரும் மகாயோகி
மாற்றம் தரவந்த ஒரே ஞானி
மக்களை மீட்க வந்த மாதவசி
5. தவசி உந்தன் திருவடி பற்றியவர்க்கு
தரணியில் ஞான சித்தி உறுதிஉறுதி
அவனியில் உன் தர்மம் ஏற்று
அளவிலா தொடரும் அன்பர்கட்கு
6. அன்பர்கட்கு பிறவாபேறு உறுதி
அவர்களெல்லாம் அரங்கன் உன் வழி
இன்பமான அழியாமை தனை பெற்று
இந்த உலகில் ஞானிகளாக மாற்றம் காணக்கூடும்
7. கூடவே அரங்கன் உந்தனுக்கு
குவலயத்தில் நித்தம் நித்தம்
சூட்சும வரம் ஈடேற்றி ஆறுமுகன் யான் துணையாய் நிற்க
எவர் உந்தனை இடைவிடா தொடர் பூஜை செய்கின்றாரோ

8. செய்து வரும் அன்பர்கட்கு
சயனவழி சூட்சும சக்திவழி
சுடராக ஆறுமுகன் யான் காட்சி தருவேன்
சுத்தவெளியில் எனை காணும் அற்புதத்தை தருவேன்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–